மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாவாந்தூரிலே, 110/11 கிலோ வோல்ட் புதிய துணை மின் நிலையம் மற்றும் 10 M.V.A. திறன் கொண்ட மின் மாற்றி ஆகியவை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே சொன்னது போல இடப்பிரச்சினை போன்ற பல்வேறு பிரச்சினைகளினால் ஏற்படுகின்ற காலதாமதத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து, விரைவாக அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

புறவழிச்-சாலை

***36871—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஜூலை 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் குடிசைவாசிகளின் தென்றலாய்த் தோன்றி பசுமை வீடு வழங்கிய தங்கத் தாரகையே, தமிழர் கலை, பண்பாடு, இலக்கியம், ஆன்மீகமிக்க கலாச்சாரம். ஏனென்றால், ஆன்மீகக் கலாச்சாரமே அமைதிக்கு அச்சாரம். அன்னை மொழி சொன்ன வழி நிற்கும் ஆன்மீகத் தெய்வமே, பிரிவினைவாதம், பயங்கரவாதம், தீவிரவாதம், உலக ஜனநாயகக் கோட்பாட்டிற்கு அபாயம் என்று, இந்திய தேசிய சுதந்திர மூச்சில் தேசியத்தைக் காட்டும் தென்னாட்டு தீபமே, சிறுபான்மை-பெரும்பான்மை, ஏழை-பணக்காரன் என்ற பாகுபாடு மொழிதலுக்கும், பண்பற்ற கூச்சலுக்கும் கழகத்தில் இடமில்லை என்றும், கலங்கி நிற்கும் உள்ளங்களுக்கு கனிவோடு உணர்த்திவரும் கருணை மொழியே! தமிழைச் சொல்லி, தமிழர்களைச் சொல்லி, எதிலும் அரசியல் ஆதாயம் தேடுபவர்களையும், அசுரத்தனமான தீயசக்தி, நயவஞ்சக நாக்கு துருத்தி கூடாரத்தையும் ஆறையாடும் சிங்கமான தலைவியே, (மேசையைத் தட்டும் ஒலி) மாசற்ற நேசம் கொண்டு தன்னை எந்நாளும் பின்பற்றும் விசுவாசம் மிக்க தொண்டர்களை அரவணைக்கும் அம்மா அவர்களை வணங்குகின்றேன்.

எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட, சோழவந்தானில் புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாகும். கருவைகொண்டு, பன்னைப்பட்டி ரோடு, கருவாட்டுபொட்டல் முதல் பேட்டை, இரயில்வே மேம்பாலத்தின்கீழ் விவேகானந்தா கல்லூரி அருகில் சோழவந்தான் சாலையை இணைக்கும் புறவழிச் சாலை வேண்டுமென்று, பெருகிவரும் மக்களின் நலன் கருதி, நீண்ட நாட்களாக கோரி வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் எளிதில் சென்று வரக்கூடிய நிலையிருக்கும் என்பதையும், அவர்களுடைய குறைகள் நீங்கும் என்பதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் பேரூராட்சியானது, திருமங்கலம், பன்னப்பட்டி, சிறுக்குவார்பட்டி சாலை, மாவட்ட சாலை எண் 73, கிலோ மீட்டர் 24/0-ல் ஆரம்பித்து, கிலோ மீட்டர் 25/6-ல் முடிவடைகிறது. சோழவந்தான் பேரூராட்சியின் இடதுபுறம் வைகை ஆறு மற்றும் வலது புறம் சென்னை-கன்னியாகுமரி இரயில்வே பாதையும் செல்கின்றது. மேலும், சோழவந்தானிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள தேசிய நெடுஞ்சாலை எண் 7 நான்கு வழிச்சாலையில், மாவட்ட முக்கிய சாலையான சோழவந்தான் வலையபட்டி சாலை இணைகிறது. சமயநல்லூரிலிருந்து கனரக வாகனங்கள் தேசிய நெடுஞ்சாலையில் செல்கின்றன. எனவே சோழவந்தான் புறவழிச் சாலை அமைத்திட தற்போது அவசியம் ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், சோழவந்தான் தொகுதியில் இரயில்வே மேம்பாலம் அமைத்துக் கொடுப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணைகள் பிறப்பித்து, இப்போது நிலம் கையகப்படுத்தும் வேலைகள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. அதற்காக இந்த நல்லாட்சிக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குருவித்துறை-முத்துலிங்கபுரத்தை இணைக்கும், மண்ணாடிமங்கலம், பன்னப்பட்டி-இரும்பாடியை இணைக்கும், கச்சிராயிருப்பு-சோழவந்தான் ஆகிய சாலைகளை இணைக்கும், வைகையாற்றில் தரைப்பாலம் அமைக்க வேண்டுமென்று அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அங்கு வாழ்கின்றவர்கள் 15 கிலோ மீட்டர் சுற்றிவரக்கூடிய பரிதாப

நிலை உள்ளது. உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் Gate அருகிலுள்ள நெடுஞ்சாலைக்குச் சொந்தமான பாலமும் பழுதடைந்துள்ளது. மேற்கண்ட பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பாண்டில் செய்துகொடுக்க முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தானில் இரயில்வே கடவு எண் 346-க்கு மாற்றாக சாலை மேம்பாலம் கட்ட ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நிலம் கையகப்படுத்துதல், பயன்பாட்டுச் சாலைகளை மாற்றி அமைத்தல், சாலை மேம்பாலம் கட்டும் பணிகள் ஆகியவை முடிவடைந்தவுடன், போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மேலும் தரைப்பாலம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் ஆய்வு செய்து, தரைப்பாலம் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருந்தால், அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சியில், நாகை சாலையையும் திருவாரூர் சாலையையும் இணைக்கக்கூடிய புறவழிச் சாலைப் பணிகள் தொடங்கப்பட்டன. ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, தற்போது அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற முறை நான் இங்கே கேள்வி கேட்டபோது ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தடைபட்டிருக்கக்கூடிய அந்தப் புறவழிச் சாலைப் பணியை உடனடியாக இந்த ஆண்டே துவங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகரத்திற்கு புறவழிச் சாலை அமைக்க விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டிருக்கின்றார்கள். தற்போது நிலம் எடுக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணி நிறைவு பெற்றவுடன், புறவழிச் சாலை அமைக்கும் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளிலும், புறவழிச் சாலைகளிலும் போக்குவரத்திற்கு இடையூறு இருக்கிறது. ஆகவே, புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள கடற்கரை சாலையை மக்களுடைய நலன் கருதி விரிவுபடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது அந்தச் சாலையை விரிவுபடுத்த வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதை ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப படிப்படியாக சரிசெய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சந்திரராஜன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.